## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வித்தியாரன்ய விநயக்ரம் சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1986, ஜூலை மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, ஜூலை மாதம் 25 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

## 1986 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வித்தியாரன்ய விநயக்ரம சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[1986 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப் பட்டது.

ச. வ.—ஓ. 29/85
1756

### வித்தியாரன்ய விநயக்ரம சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"வித்தியாரன்ய விநயக்ரம சபை" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப் பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் 1952 ஆம் ஆண்டு பெப்புருவரி 24 ஆம் தேதியன்று கொழும்பில் தாபிக்கப்பட்டதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறை வேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக் கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித் தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டமானது, 1986 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, வித்யா ரன்ய விநயக்ரம சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட் டப்படலாம்.

வித்யாரன்ய விநயக்ரம சபையைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இத னகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வித்யாரன்ய விநயக்ரம சபையின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும், அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத் தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப் பீடுசெய்யப்படும்) "வித்யாரன்ய விநயக்ரம சபை" என்ற பெயரின் கீழும் மருடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப் பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற் கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றுவதற்கும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. அவையாவன—

(அ) மதகுருமாரிடையேயும் அத்துடன் பாமரரிடையேயும் பௌத்த தத்துவம் பற்றிய அறிவையும் ஒழுக்காறினையும் மேம்படுத்துதல்;

(ஆ) சமூக சீர்திருத்தத்தையும், சமூக அபிவிருத்தியையும் கொண்டு வருவதற்காக இலங்கைத் தீவில் பௌத்த தூதுக்குழுக்களைத் தாபித்தலும் பேணிவருதலும் ;

(இ) சமூக சீர்திருத்தங்களுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களும், பிக்குகள் தொகுதியினரால் வழிகாட்டப்பட்டு, உதவியளிக்கப் படுபவர்களுமான (உலகவாழ்க்கையைத் துறந்தவர்களான) அநகாரிக தொகுதியினரை ஒழுங்கு செய்தல் ;

(ஈ) மருத்துவம், சோதிடசாத்திரம் போன்ற புராதன கலைகளையும், அறிவியல்களையும் முன்னேற்றுவதற்கும், மீளப்புதுப்பிப்பதற்கும் பேணிக்காப்பதற்கும் எனப் பயிற்சி நிறுவனங்களைத் தாபித்தல் ;

(உ) தம்மையும் மொழிகளையும் போதிப்பதற்கான புராதன முறைகளை மீளப்புதுப்பித்தல் ;

(ஊ) பௌத்த தத்துவத்திலும், சாசனத்திலும் பரீட்சைகளை நடாத்துதலும், அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்குப் பரிசுகளை வழங்குதலும் ;

(எ) பௌத்த தூதுக்குழு வேலையை மேம்படுத்துவதற்கென புத்தகங்களையும், வேறு இலக்கியங்களையும் தயாரித்தலும், அச்சிடுதலும், வெளியிடுதலும் அத்துடன் அத்தகைய புத்தகங்களைப் பொது மக்களிடையே, விசேடமாக மறியற்காரர்களிடையே பகிர்ந்தளித்தலும் ;

(ஏ) நாடெங்கிலும் சமத விதர்ஷன தியானத்தைக் கடைப்பிடித்தலை மேம்படுத்துதல் ;

(ஐ) பஞ்சசீலக் கோட்பாடுகளையும், பத்துவித தர்மங்களையும் கடைப்பிடிக்கும் நீதியானதொரு சமூகத்தை உருவாக்குவதற்கு அவசியமான நடபடிகளை எடுத்தல் ; அத்துடன்

(ஒ) மேற்கூறிய குறிக்கோள்கள் எல்லாவற்றையும், அல்லது அவற்றில் எதையேனும் எய்துவதற்கு உகந்தனவான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய வேறு செயல்களையும் காரியங்களையும் செய்தலும் அவற்றுக்கு ஊக்கமளித்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் ; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடுசெய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களினது முகாமை.

5. (1) கூட்டுத்தாபனத்தின் பொது நிருவாகமும் முகாமையும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய விடயத்துக்கேற்ப அத்தகைய விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும், பெயர்குறித்து நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைப் பேரவையொன்றுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் அத்தகைய விதிகளுக்கிணங்க கிளைச் சபைகளும் குழுக்களும் நியமிக்கப்படலாம் என்பதுடன், அவை ஒவ்வொன்றும் குறிப்பிட்டவொரு செயற்பாட்டுத்துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பொறுப்பாகவிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஆண்டுப் பொதுக்கூட்டமொன்றில் அல்லது விசேட பொதுக் கூட்டமொன்றில், சமுகமளித்து வாக்களிக்க உரித்துடைய உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எதுதொடர்பிலும், இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பு ஒழுங்கமைப்புக்களைச் சேர்த்துக் கொள்ளுதல், அவை விலகுதல் அல்லது அவற்றை விலக்குதல் ;

(ஆ) முகாமைப் பேரவைக்கும், பல்வேறு குழுக்களுக்கும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கான தகவும், தேர்ந்தெடுக்கப்படும் மாதிரியும், அவற்றின் உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலகுதலும் அல்லது பதவியை வறிதாக்கலும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அத்துடன் அவ்வுறுப்பினர்களது தத்துவங்களும், நடத்தையும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினது தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும், முகாமைப் பேரவையினதும் பல்வேறு குழுக்களினதும் கூட்டங்களின்போது கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், கூட்டங்களைக் கூட்டுதலும், நடத்துதலும், அத்தகைய கூட்டங்களுக்கான நேரமும், இடமும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும், அக்கூட்டங்களின்போது அலுவல்களைக் கையாளுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையில் திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

7. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாகவரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத் தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

சபையினால் செலுத்தப்படற்பாலனவும் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

8. இந்தச் சட்டம் தொடங்குகின்ற நேரத்தில் சபைக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், சபைக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைப் பேரவையின் இரு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல், சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களதும் உரிமைகளைப் பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.